இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 05.06.2026

# த.வெ.க. நிர்வாகிகளின் அராஜகங்கள்!

**‘தீ’ற்குறிகளின் கூட்டம்’ என்று அதனை மட்டமாக நினைத்துவிட முடியாது. அவர்களில் பலர் நடத்தும் அராஜகத்தையும், அட்டூழியத்தையும் பார்க்கும் போது ‘கிரிமினல்களின் கூடாரம்’ ஆக அது இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.**

கடந்த இருபது நாளில் த.வெ.க. நிர்வாகிகள் ஆடிய ஆட்டம் இவை....

★ தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டம் அருகே இளம்பெண் ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்துக் கூட்டு பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் த.வெ.க. தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன், ராமநாதபுரம் மாவட்ட த.வெ.க. நிர்வாகி ஜெயபால் ஆகியோர் கைது செய்யப்பட்டு உள்ளார்கள்.

★ சென்னை காசிமேட்டில் 11 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த ஆர்.கே. நகர் 43-ஆவது வார்டு த.வெ.க. பகுதிப் பொறுப்பாளர் ‘பாம்பு’ தினேஷ் ‘போக்சோ’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு உள்ளார்.

★ தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் கல்லூரி மாணவி குளிப்பதை ஜன்னல் வழியே எட்டிப்பார்த்த த.வெ.க. நிர்வாகி தியாகு (32) கைது செய்யப்பட்டுள்ளார்.

★ மதுரை கீழமாத்தூர் பகுதியில் பெயிண்டர் வேலை பார்த்து வரும் த.வெ.க. நிர்வாகி கண்ணன், 10-ஆம் வகுப்பு மாணவியின் வீட்டுக்கு நள்ளிரவில் சென்று பாலியல் தொல்லை அளித்தபோது கையும் களவுமாகச் சிக்கினார். கைது செய்யப்பட்ட அவர் ‘போக்சோ’ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

★ 100-க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களிடம் அதிக லாபம் தருவதாகக் கூறி சுமார் 25 கோடி ரூபாய் வரை பண மோசடி செய்ததாகப் புதுக்கோட்டை மத்திய மாவட்ட த.வெ.க. செயற்குழு உறுப்பினர் சரவணன் கைதானார்.

★ கும்பகோணம் நாலுரோடு பகுதியில் சாலையில் விதிமுறைகளை மீறி வைக்கப்பட்ட த.வெ.க. பேனரை அகற்றக் கூறிய போக்குவரத்து காவலரைத் தாக்கி, அவரது கையை முறித்த த.வெ.க. தொண்டர்கள் அருண், காளி ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

★ பல்லடம் காவல் நிலையத்துக்குள் புகுந்து த.வெ.க.வினர் ‘ரீல்ஸ்’ எடுத்துள்ளார்கள். விஜய்யின் சினிமா பாடலுடன் சேர்த்து வலைதளங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

★ ஒட்டன்சத்திரம் அருகே உள்ள பாலப்பன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இளங்கோவன், த.வெ.க. கிளைச் செயலாளர். இவரால் பாதிக்கப்பட்ட மக்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாகப் புகார் அளித்துள்ளனர். த.வெ.க. நிர்வாகி மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மனுவில் குற்றம் சாட்டியுள்ளனர்.

★ நாமக்கல் தினசரி காய்கறி மார்க்கெட்டில் எம்.எல்.ஏ., திலீப் ஆய்வு செய்தபோது, உடன் சென்ற த.வெ.க. மாவட்டச் செயலாளர் சதீஸ், அங்கிருந்த மாநகராட்சி வருவாய் ஆய்வாளரை ஒருமையில் பேசியதுடன், ‘டிரான்ஸ்பர் செய்து விடுவேன்’ என மிரட்டும் காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

★ பெருங்களத்தூரில், ஆப்பரேட்டர் துரை என்பவர், கட்டிட இடிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். த.வெ.க. கொடி அணிந்த வாகனத்தில் வந்த த.வெ.க. வட்டச்செயலாளர் ஜெய், ஒரு லட்சம் ரூபாய் கேட்டு அடாவடி செய்தார். தனது ஆதரவாளரிடம், ‘கத்தியை எடு’ எனக் கூறிய த.வெ.க. நிர்வாகி ஜெய், பொக்லைன் ஆப்பரேட்டரை சரமாரியாகத் தாக்கி இருக்கிறார்.

★ செங்கல்பட்டு மாவட்டம்-மதுராந்தகத்தை அடுத்த கீழாமூர் கிராமத்தில் வசித்து வந்த முத்தம்மாளிடம் நகையைப் பறித்து கொலை செய்ததாக த.வெ.க. கிளை நிர்வாகி வாசுதேவனை போலீசார் கைது செய்தனர்.

★ வேலூர் மாவட்டம், கணியம்பாடியைச் சேர்ந்த த.வெ.க. ஒன்றிய செயலாளர் விஜயகுமார் செங்கல் சூளையில் ஒரு லட்சம் மாமூல் கேட்டு மிரட்டினார். இதனைக் கண்டித்து அப்பகுதி மக்கள் கணியம்பாடி காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். புகார் அளித்தவர்கள் மீதே வேலூர் கிராமிய காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதன் பிறகுதான் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வேறு வழியில்லாமல் கட்சியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

★ சென்னை அரும்பாக்கம் அருகே மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை த.வெ.க.வைச் சேர்ந்த குணசேகரன் என்பவர் பல வருடங்களாக ஆக்கிரமித்து உணவகம் நடத்தி வந்திருக்கிறார். அதை அகற்றச் சொன்ன மாநகராட்சி அதிகாரிகளையும், கட்டுமான நிறுவன ஊழியரையும் தாக்கி இருக்கிறார் குணசேகரன். அவர் மீது அமைந்தகரை காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

★ கன்னியாகுமரி மாவட்டம் - குலசேகரத்தில் அடகுவைத்த 30 லட்சம் ரூபாய் நகையை திருப்பித் தராமல் கூலித் தொழிலாளிக்கு கொலை மிரட்டல் விடுத்து வரும் த.வெ.க. பிரமுகர் மீது, தக்கலை துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

★ மதுரை - திருப்பரங்குன்றத்தில் மூடப்பட்ட ‘டாஸ்மாக்’ கடை மீண்டும் திறக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பாரின் உரிமையாளர் த.வெ.க.வைத் சேர்ந்தவர் என்பதே ‘டாஸ்மாக்’ கடை மீண்டும் திறக்கப்பட்டதற்குக் காரணம் எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

**- ‘தூயசக்தி’ விஜய் ஆட்சியில் இருபது நாட்களுக்குள் அவரது கட்சி நிர்வாகிகள் நடத்தியுள்ள அராஜகங்கள் இவை. அராஜகங்கள் ஏற்படாமல் சினிமாவில் தடுப்பாரே, அப்படித் தடுத்தாரா? இல்லை. ‘அப்படித் தடுப்பார்’ என்று நினைத்து வாக்களித்த மக்களைத்தான் த.வெ.க. நிர்வாகிகள் வேட்டையாடி வருகிறார்கள்.**

“பெற்ற பிள்ளைகள் பேச்சைக் கேட்டு

# த.வெ.க.வுக்கு ஓட்டுப் போட்டுட்டு நடுத்தெருவுல நிக்குறோம்!”

## தமிழக ரீல்ஸ் அரசைக் கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

காட்டுமன்னார்கோவில், ஜூன் 5–

பெற்ற பிள்ளைகள் பேச்சை கேட்டு தவெகவுக்கு ஓட்டு போட்டு நடுத்தெருவில் நிற்கிறோம் என விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் பேசினர். கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பேருந்து நிலையம் முன் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகளை வஞ்சிக்கும் தமிழக அரசை கண்டித்து மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்க தலைவர் விநாயகமூர்த்தி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில், கூட்டுறவு கடன்களை தமிழக அரசு தேர்தல் வாக்குறுதி படி 5 ஏக்கர் வரை முழுமையாகவும், 5 ஏக்கருக்கு மேல் 50% கடனும் தள்ளுபடி செய்ய மறு பரிசீலனை செய்து அறிக்கை வெளியிட வேண்டும். கர்நாடகா அரசு மேகதாது அணைக்கட்டும் திட்டத்தை கைவிட வேண்டும்.

விவசாய பயன்பாட்டிற்கான மும்முனை மின்சார சேவையை முறையாக வழங்கி, விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தப்பட்டது. தொடர்ந்து விவசாயத்தை விட விளையாட்டு பெரிது என பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவை கண்டித்து கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், விவசாயிகள் தினமும் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகிறோம்.

மேலும் கடன் தொல்லையால் விவசாயிகள் இறக்கின்றனர். விளையாட்டு துறை அமைச்சர் விளையாட்டாக விவசாயத்தை விட விளையாட்டு சிறந்தது என பேசினார். அதனை வன்மையாக கண்டிக்கிறோம், அதுபோல நடக்கும் ஆட்சியாளர்கள் எந்த மனநிலையில் ஆட்சி செய்கிறார்கள் என்றால் ரீல்ஸ் மோகத்தில் உள்ளனர். நாங்கள் எங்கள் வீட்டில் உள்ள பிள்ளைகள் பேச்சை கேட்டு, தவெகவுக்கு ஓட்டு போட்டு ஏமாந்து நடுத்தெருவில் நிற்கிறோம். தற்போது இதுவரை இல்லாத கஷ்டங்களை அனுபவிக்கிறோம். நம் வாழ்வாதாரம் இந்த ஆட்சியில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என கண்ணீர் மல்க கூறினர்.

இதில் விவசாயிகள் நஜமுதீன், வெங்கடேசன், முத்துகுமாரசாமி, ராமமூர்த்தி, மகேந்திரன், ஜெயராமன், பன்னீர்செல்வம், சண்முகம், ராமதாஸ், முத்துகுமார சாமி, முத்துக்குமரன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, கோரிக்கைகளை முன் வைத்து கோஷங்களை எழுப்பினர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; வரும் ஜூன் 10 அன்று பிரதமர் மோடி அப்பதவியில் 4,399 நாட்களை நிறைவு செய்கிறார். பண்டித நேரு பிரதமராக 4,398 நாட்கள் இருந்தார். எனவே இந்தியாவின் மிக நீண்ட காலம் பதவி வகித்த பிரதமராகிறார் மோடி; நேருவின் சாதனையை முறியடிக்கிறார் என்று நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; வரலாறு, நேருவுக்கு இணையாக மோடியை ஒப்பிடாது.**

**நேருவின் ஆளுமை உயரம் வேறு; மோடி ஆளுமை அதன்முன் நிற்காது.**

**செஞ்சிக் கோட்டை ஏறியவரெல்லாம் தேசிங்கு ராஜன் கிடையாது !**

## ஆந்திர மாநிலம் – விஜயவாடாவில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## சமூகநீதிப் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் – பகுஜன் கலாச்சார நிகழ்ச்சி!

*விஜயவாடா, ஜூன் 5-*

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் சமூகநீதியின் தலைசிறந்த முன்னோடியுமான முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா, ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடா வில் அமைந்துள்ள தும்மலப்பள்ளி கலா க்ஷேத்திரத்தில், பி.சி. சைதன்ய வேதிகா அமைப்பின் சார்பில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு நடைபெற்ற “பகுஜன் மட்டாபட்டா கலாச்சார நிகழ்ச்சி” அறிவார்ந்தோர், ஆய்வறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், பிற்படு த்தப்பட்டோர் அமைப்பின் தலைவர்கள் மற்றும் மாணவர்களின் பெரும் பங்கேற்பைப் பெற்றது.



### மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி.

நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பெரும் புகழஞ்சலி செலுத்தினார். அதனை தொடர்ந்து சமூகநீதி, இடஒதுக்கீட்டுக் கொள்கைகள், மொழி உரிமைகள், கூட்டாட்சி தத்துவம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய ஒப்பற்ற பங்களிப்புகளை விரிவாக எடுத்துரைத்தார். சமூக நலன் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் முன்னுதாரண மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றியமைத்தது கலைஞரின் தொலைநோக்கு தலைமையே காரணம் என அவர் குறிப்பிட்டார்.

தெலங்கானா மாநிலத்தின் ஓய்வுபெற்ற காவல் துறை தலைமை இயக்குநர் (DGP) ஜே. பூர்ணசந்திர ராவ், கலைஞர் முன்னிறுத்திய சமூகநீதி, சமத்துவம் மற்றும் ஜனநாயக அதிகாரமளிப்பு ஆகிய உயரிய கொள்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினார். பின்னர், முதலமைச்சராக கலைஞர் அவர்கள் செயல்படுத்திய திட்டங்கள் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்கள் மற்றும் பிற புறக்கணிக்கப்பட்ட சமூகங்களின் முன்னேற் றத்திற்கு பெரும் பங்காற்றியதாக அவர் தெரிவித்தார்.

அகில இந்திய சமூகநீதிப் பேரமைப்பின் (AIBSP) தேசிய ஒருங்கிணைப்பாளரும், முக்கிய BC அறிஞருமான திரு. நரகோனி கவுட், கலைஞரின் வாழ்க்கையும், பணியும் இந்தியா முழுவதும் உள்ள பகுஜன் இயக்கங்களுக்கு தொடர்ந்தும் ஊக்கமளிப்பதாகக் குறிப்பிட்டார். பின்னர் முத்தமிழறிஞர் கலைஞர், தந்தை. பெரியார், டாக்டர் அம்பேத்கர் மற்றும் மகாத்மா ஜோதிராவ் புலே போன்ற சமூகப் புரட்சியாளர்களின் சீர்திருத்தப் நடவடிக்கைகளை இளைஞர்கள் கற்றறிந்து பின்பற்ற வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

BC சைதன்ய வேதிகாவைச் சேர்ந்த வி. ஸ்ரீனிவாஸ், கல்வி, அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் மூலமாக பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி சமூக நீதிக்கான இலக்குகளை முன்னெடுக்க வேண்டியதன் முக்கி யத்துவத்தை வலியுறுத்தினார்.

BCIF அமைப்பின் தலைவர் டி. சிரஞ்சீவலு, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக கலைஞர் அவர்கள் மேற்கொண்ட வாழ்நாள் அர்ப்பணிப்பை பாராட்டியதுடன், ஆட்சி அமைப்புகளிலும் பொது நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பங்கேற்பு மேலும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

### ஓ.பி.சி மாணவர் சங்கத் தலைவர் கவுட் கிரண் குமார்!

அகில இந்திய OBC மாணவர் சங்கத்தின் (AIOBCSA) தலைவர் கவுட் கிரண் குமார், இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும், சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை தொடர்ந்து பாதுகாத்ததிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆகப்பெரும் பங்களிப்பை நினைவு கூர்ந்தார். சமத்துவம், சுயமரியாதை மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காக கலைஞர் அவர்கள் மேற்கொண்ட வாழ்நாள் போராட்டத்திலிருந்து மாணவர்களும் இளைஞர்களும் உத்வேகம் பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பகுஜன் மக்களின் வரலாறு, அடையாளம் மற்றும் எதிர்பார்ப்புகளை பிரதிபலிக்கும் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அதனைத்தொடர்ந்து, சமூகநீதியின் சிற்பியாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தனித்தன்மை, நாடு முழுவதும் உள்ள சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தலுக்காக குரலெழுப்பும் இயக்கங்களுக்குத் தொடர்ந்து உத்வேகம் அளித்து வருவதாக பங்கேற்பாளர்கள் நினைவு கூர்ந்தனர்.

மேலும், சமூகநீதி கோட்பாடுகள், அரசியலமைப்புச் சட்ட விழுமியங்கள் மற்றும் பகுஜன் தலைவர்களின் தேச நிர்மாணப் பங்களிப்புகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை தொடர்ந்து பரப்புவதற்கு ஏற்பாட்டாளர்கள் உறுதி மொழி ஏற்றனர் என்று விஜயவாடாவை சேர்ந்த பி.சி. சைதன்ய வேதிகா தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்ற தொகுதி பழங்காநத்தம் பகுதி தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு பெண்களுக்கு ரூபாய் 8லட்சங்கள் மதிப்பிலான இரண்டு பேட்டரி ஆட்டோக்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வடக்கு மாவட்ட செயலாளர் பி.மூர்த்தி, பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் சுதன் தலைமையில் வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், பகுதி செயலாளர்கள் மருது பாண்டியன், காவேரி, ராஜகோடி, மதிவெங்கடேஷ், ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் முருகானந்தம் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர். முடிவில் வட்டச் செயலாளர் ஆர்.சௌந்தரராஜன் நன்றி கூறினார்.